(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW.12

| | | |
|---|---|---|
| Name | : | எஸ்.மலர்விழி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 03.12.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் குமாரபாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.10.2018ம் தேதி திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 27.10.2018ம் தேதி 13.30 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது கணேசன் த/பெ. சின்னப்பன் , குமரமங்கலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண்.283/2018 வழங்கினேன். மேற்படி மனுவினை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் நான் 30.10.2018ம் தேதி 20.00 மணிக்கு திருச்செங்கோடு நகர கா.நி.கு.எண்.597/2018 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். முதல் தகவ்ல அறிக்கை அ.சா.ஆ.3. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான திருச்செங்கோடு கிழக்கு ரத வீதிக்கு 31.10.2018ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் வெங்கடாச்சலம் , ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. மேலும் சாட்சிகள் புகார்தாரரான கணேசன் மற்றும் இதர சாட்சிகளான மோகன், கோபால், ரமேஷ், வடிவேல், டவுன் சர்வேயர் வினோத்குமார், நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் முனிராஜா, கிராம நிர்வாக அலுவலர் மணிவண்ணன், அவரது உதவியாளர் பிரபுகுமாரன் ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி எதிரிகளான கன்னியப்பன், மகேந்திரன் ஆகியோர் பொதுஊழியரான நில அளவையர் மற்றும் நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர் ஆகியோரை பணி செய்ய விடாமல் தடுத்தது உண்மையென தெரிய வந்ததால் சட்டப்பிரிவை 294(பி), 323, 506(2) இதச விலிருந்து 294(பி), 323, 353, 506(2) என பிரிவு மாற்றம்

செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5. எதிரிகளைத் தேடி வந்த நிலையில் இருவரும் முன்ஜாமீன் பெற்றிருந்ததால் எதிரிகள் மீது 30.11.2018 ம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2), 353 -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை.-

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 27.10.2018. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் 30.10.2018 அன்று நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் அது தட்டச்சுப்பிழை. இறுதி அறிக்கையில் சம்பவம் 30.10.2018 அன்று நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் அது தட்டச்சுப்பிழை. 161(3) குவிமுச வாக்குமூலங்களிலும் சம்பவம் 30.10.2018 அன்று நடந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் அது தட்டச்சுப்பிழை. 27.10.2018 அன்று காலை 6.50 மணியளவில் எதிரி மகேந்திரன் ஒயர்லெஸ் மெசேஸ் ஒன்றை தனது கட்டிடம் உடைக்கப்பட்டதாக காவல் நிலையத்திற்குகொடுத்திருந்தார் அதன் அடிப்படையில் சிஎஸ்ஆர் எண்.281/2018 என மனு ரசீது வழங்கப்பட்டதென்றால் 27.10.2018 ம் தேதி காலை சுமார் 7.10 மணியளவில் காவல் கட்டுப்பாட்டு அறை 100 க்கு மகேந்திரன் என்பவர் கூறியதன்பேரில் அரை மணி நேரத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு என்னுடன் இருந்த இரு போலிசாருடன் அவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது மகேந்திரன் என்வர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்பதால் நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டுவிட்டு உயரதிகாரிக்கு தகவல் கொடுத்தேன். சம்பவ இடத்திற்கு அக்கம்பக்கத்தில் உள்ள கடைகளில் உள்ளவர்களை விசாரித்தபோது கட்டிடத்திற்கு அவ்வாறு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று தான் நான் மேற்படி சிஎஸ்ஆர் 281/2018 மனுவை முடித்துவைத்துள்ளேன் என்றால் மேற்படி சிஎஸ்ஆர் 281/2018 என்னால் வழங்கப்படவில்லை. விசாரணையும் நான் மேற்கொள்ளவில்லை. சிஎஸ்ஆர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ இடத்திற்கு நான் விசாரணைக்காக சென்றேன் என்றால் நான் வான்வழி செய்தியின்படி சம்பவ இடத்திற்கு சென்றேன், மேற்படி சிஎஸ்ஆர் மனு விசாரணைக்காக செல்லவில்லை. 27.10.2018 ம் தேதி மதியம் 1.30 மணிக்கு செல்வராஜ் என்பவர் சம்பவ இடத்திலுள்ள கட்டிடத்தை மகேந்திரனும்,கன்னியப்பனும் உடைத்ததாக ஒரு மனு கொடுத்து அதனை பெற்று அதற்கு சிஎஸ்ஆர் 282/2018 என்று மனு ரசீது வழங்கினேன் என்றால் நான் கணேசன் த/பெ. சின்னப்பன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மனு ரசீது எண் 283/2018 கொடுத்தேன். இந்த வழக்கின் இறுதி அறிக்கையுடன் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகளை சமர்ப்பித்துள்ளேனா என்றால் வழக்கின் வாதி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி கணேசன் கொடுத்த புகாரில் சி.டி attach செய்து கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த குறுந்தகடை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரர் புகாருடன் இணைத்து கொடுத்ததாக சொல்லப்படும் சி.டி-யை பெறாமல் முதல் தகவல் அறிக்கையில் புகாருடன் சி.டி இணைத்து கொடுக்கப்பட்டதென்று எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் வாதியின் புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். 26.10.2018 ம் தேதி நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிட தனக்கு போலிஸ் பாதுகாப்பு வேண்டுமென ஒரு மனு

கொடுத்திருந்தார் என்றால்  சரிதான்.  என்னிடம் காட்டப்படும் மனு நகல் தான் நீதிமன்ற ஆணையர் முனிராஜா அவர்கள் காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டது  என்றால் சரிதான்.  மேற்படி ஆணையர் கொடுத்த மனு நகல் **எ.சா.ஆ.1.** மேற்படி மனுவை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் எஸ்,. ஐ கௌதம், எஸ்எஸ்ஐ சேகர், த.கா.256 ஆகியோர்களை சம்பவ இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ தினத்தன்று எஸ்ஐ கௌதம், எஸ்எஸ்ஐ  சேகர், த.கா.256 ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றது , அதே காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரியும் எனக்கு நன்கு தெரியும்  நான் வழக்கிற்காக நான் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்  வான்வழி செய்தி சம்பந்தமான விசாரணைக்காகவும், கோவில் திருவிழா பந்தோபஸ்து  பணிக்கு  சென்றதால் எனக்கு தெரியாது. கோவில்  பந்தோபஸ்து  பணிக்கு சென்றுவிட்டு காவல் நிலையத்திற்கு திரும்ப எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் மதியம் 1.30 மணிக்கு வந்திருக்கலாம், சரியாக தெரியாது.   மேற்படி நகலையும், குறுந்தகடு ஒன்றையும் வாதி எதிரி மகேந்திரன் மீது தூக்கி வீசி எங்களை ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்னதன் பேரில் எதிரிகள் ஒரு  online புகார் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.   வாதி கணேசனை தவிர நீதிமன்ற ஆணையரோ, சர்வேயரோ, விஏஓ,  தங்களது பணியை செய்ய விடாமல் தடுத்ததாக புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் என்னிடம் கணேசன்  மட்டும் தான் புகார் கொடுத்தார்.   வாதி கணேசன் தனது புகாரிலும், 161(3) குவிமுச வாக்குமூலத்திலும் கட்டிடம் சேதமடைந்ததாக சொல்லியுள்ளார் என்றால்  சரிதான்.  ஆனால் மற்ற சாட்சிகள் 161(3) குவிமுச வாக்குமூலத்தில் கட்டிடம் சேதமடையவில்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர், சர்வேயர், விஏஓ ஆகிய பொதுஊழியர்கள் தங்கள் 161(3) குவிமுச வாக்குமூலத்தில் கட்டிட சேதத்தை குறித்து எந்த விவரமும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்,  ஆனால் அவர்கள் சென்றபோது என்ன நடந்ததோ அதை மட்டும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள்.  நீதிமன்ற ஆணையர் எதிரிகள் வாய் தகராறு தான் செய்தார்கள், அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை, என்று தான் போலிசாரிடம் சொல்லியுள்ளதாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல.   ரமேஷ் கணேசன் என்பவருக்கு நண்பர் என்று 161(3) குவிமுச வாக்குமூலத்தில் கூறியுள்ளார், ஆனால் அவர் நீதிமன்றத்தில் அவர் வாதி கணேசனுக்கு மருமகன் என்று சொல்லியுள்ளார் என்றால் வாதி கணேசனுக்கு என்ன உறவு என்று எனக்கு தெரியாது, சம்பவ இட சாட்சி என்பதால் அவரது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன்.   அவர் கணேசனின் நண்பர் என்பதால் கணேசன் அழைத்ததன் பேரில் சம்ப வஇடத்திற்கு சென்றதாக 161(3) குவிமுச வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார், சாட்சி அவ்வாறு  சொல்லுமபோது அவர்களுக்குள் என்ன உறவு, முறை எத்தனை வருஷமாக தெரியும் என்று விசாரிக்க வேண்டுமென்றால் அவர் சம்பவ இடத்தில் இருந்த சாட்சி என்பதால் அவரை விசாரித்தேன்.   சாட்சி வடிவேல்  வாதிக்கு நண்பர் என்று தான் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார், ஆனால் அவர் வாதி  சாட்சி வடிவேலுக்கு சித்தப்பா  என்றால் எனக்கு தெரியாது.   மேற்படி சாட்சிகள் இருவரும் நீதிமன்றத்தில் நாங்கள் காவல் துறை விசாரணையின்போது உறவினர் என்று தான் சொன்னோம், ஆனால் காவல் துறை அதிகாரி நண்பர் என பதிவுசெய்துள்ளார் என்றும்  சாட்சியமளித்துள்ளனர் என்றால் சரியல்ல.   சாட்சி கோபால் என்பவரும்

கணேசனின் கடையில் வேலை செய்பவர் என நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார், ஆனால் 161(3) குவிமுச வாக்குமூலத்தில் அதை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளும் வாதி கணேசனுக்கு உறவினர்கள் அதை மறைத்து வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அவர்களை நண்பர் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கிழக்கு ரத வீதி பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் பகுதி என்றால் மீடியமாக இருக்கும். கடைகள் நிறைய உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலை 10.00 மணியளவில் அங்கு கடை வைத்துள்ள நபர்கள் ஒருவரை கூட நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் நான் சம்பவம் நடந்து முடிந்த பிறகு 13.30 மணிக்கு கணேசன் கொடுத்த புகாரின் அடிப்படையில் மனு ரசீது வழங்கினேன். கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்துவாக்குமூலம் பதிவுசெய்தேன். சம்பவம் நடந்த இடத்திற்குசென்று அருகிலுள்ள சாட்சிகளை விசாரித்தேனா என்றால் 31.10.2018 ம் தேதி காலை 7.00 மணி சுமாருக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் இருவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் சொல்லும் இரண்டு சாட்சிகள் வெங்கடாச்சலம் , ராஜசேகரும் என்றால் சரிதான். வெங்கடாசலமும் , ராஜசேகரும் கணேசனுக்கு நெருங்கிய உறவினர்கள் என்ற எனக்கு தெரியாது. அருகிலுள்ள பழக்கடை மற்றும் ஸ்கேன் சென்டர் ஆகியவற்றில் வேலை செய்பவர்களை நான் சாட்சியாக விசாரித்தேனா என்றால் காலை 7.00 மணியளவில் கடைகள் திறக்கப்படவில்லை. கிழக்கு ரத வீதியில் காலை மலைக்கு செல்பவர்கள் பூ வாங்கும் இடம் என்பதால் அங்கு காலை 6.15 மணியளவில் கடைகள் திறக்கப்படும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை.- இல்லை.